# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

<u>ஆணை நாள் 02.11.2020</u>

<u>முன்னிலை</u>

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2467/B/2020</u>**

| | | |
|---|---|---|
| திருமதி. M. மாணிக்கம் | | மேல்முறையீட்டாளர் |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம்,<br>தென்காசி மாவட்டம். | எதிர் | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திருமதி. M. மாணிக்கம் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு. ஞானசேகரன், மண்டல துணை வட்டாட்சியர், கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 25.11.2019 தேதியிட்ட மனுவில், தென்காசி மாவட்டம், தென்காசி தாலுக்கா, பொய்கை கிராமத்தில் உள்ள சில சொத்துக்களை பற்றிய விவரங்களை பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(நிலம்), தென்காசி மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 28.12.2019 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 26.02.2020 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என்று விசாரணையின்போது தெரிவித்தார். பொதுத்தகவல் அலுவலர், மனுதாரர் பொது அதிகார அமைப்பு அலுவலகத்திற்கு வந்து ஆவணங்களைப் பார்வையிட்டு நேரில் தகவல் பெற்றுக் கொள்ளலாம் என்று விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரரும் தான் பொது அதிகார அமைப்பு அலுவலகத்திற்கு நேரிடையாக சென்று ஆவணங்களைப் பார்வையிட்டு தகவல் பெற்றுக் கொள்வதாக உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன:-
**விசாரணையின்போது பொது தகவல் அலுவலர் உறுதியளித்தபடி மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவலை, மனுதாரர் பொது அதிகார அமைப்பு அலுவலகத்திற்கு நேரிடையாக சென்று ஆவணங்களைப் பார்வையிட்டு, தனக்கு தேவையான நகல்களை பெற்றுக் கொள்ள மனுதாரருக்கும், மனுதாரர் கோரும் தகவலை மனுதாரருக்கு நேரிடையாக வழங்கி, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையம் உத்திரவிடுகிறது.**

6. மேற்படி ஆணைக்கிணங்க பொது தகவல் அலுவலர் தகவல் தர தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)ன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2467/B/2020</u>**
**<u>பெறுநர்</u>**
பொது தகவல் அலுவலர்,
மண்ல துணை வட்டாட்சியர்,
கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம்,
தென்காசி மாவட்டம்.

திருமதி. M. மாணிக்கம்,
க/பெ R. முருகேசன்,
1.6.21/3, கருப்பசாமி கோவில் தெரு,
சாம்பவர் வடகரை - 627 856.
அலைபேசி - 99941 20287.

Copy to: File
SSPA-10.11.2020